Regional Bulletin / Puducherry / Tamil /18.10/ 31.08.2024 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவண குமார்

நாள் 31.08.2024 சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியிலிருந்து காணொளி காட்சி மூலம், 3 வந்தே பாரத் ரயில்களை, கொடி அசைத்து தொடக்கி வைத்தார்.

புதுடெல்லியிலுள்ள பாரத் மண்டபத்தில் மாவட்ட நீதித்துறையின் தேசிய மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடக்கி வைத்து உரையாற்றினார்.

புதுச்சேரியில் புதிய சட்டப்பேரவை கட்டடம் கட்ட, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் ஒப்புதல் அளித்துள்ளதாக, சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம் தெரிவித்தார்.

பாரீஸ், பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் இந்தியா இதுவரை 1 தங்கம், 1 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 18ஆவது இடத்திலுள்ளது.

வந்தே பாரத் -1 (18 )

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியிலிருந்து காணொளி காட்சி மூலம், சென்னை-நாகர்கோவில், மதுரை-பெங்களூர், மற்றும் மீரட்-லக்னோ ரயில் தடங்களில் இயக்கப்படும், 3 வந்தே பாரத் ரயில்களை, கொடி அசைத்து தொடக்கி வைத்தார். சென்னையில் நடைபெற்ற இவ்விழாவில், தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதேபோல், மதுரையில் நடைபெற்ற, மதுரை – பெங்களூரு வந்தே பாரத் ரயில் சேவை தொடக்க விழாவில், மத்திய ரயில்வே துறை இணையமைச்சர் திரு.வி.சோமண்ணா பங்கேற்றார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், வந்தே பாரத் ரயில்களின் விரிவாக்கத்தின் மூலம் இன்று, நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் வடக்கிலிருந்து தெற்கு வரை புதிய அத்தியாயம் தொடங்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

சுயசார்பு இந்தியா மற்றும் இந்தியாவில் தயாரிப்போம் இயக்கத்தின் நோக்கங்களுக்கு ஏற்ப, முற்றிலும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டுள்ள இந்த அதி நவீன ரயில்களின் வருகை, மக்கள் தங்களின் வணிகம், வேலை வாய்ப்பு போன்றவற்றை விரிவுபடுத்துவதற்கான நம்பிக்கையை அளிக்கிறது என்றும் கூறினார்.

வந்தே பாரத் -2 (18 )

மேலும், உள்நாட்டு உள்கட்டமைப்பு வளர்ச்சி, வறுமையை ஒழிக்கவும், ஏழைகளுக்கு அதிகாரம் அளிக்கவும், உதவும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார். தமிழகத்தின் ரயில்வே பட்ஜெட்டுக்கு நடப்பு நிதியாண்டில் 6 ஆயிரம் கோடி ரூபாய் மத்திய அரசு ஒதுக்கியுள்ளது என்றும், இது 2014ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியைவிட ஏழு மடங்கு அதிகம் என்றும் பிரதமர் கூறினார்.

இந்த புதிய வந்தே பாரத் ரயில்கள் நாட்டின் மிக முக்கியமான வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரங்களை இணைப்பதாக கூறிய திரு. மோடி கோவில் நகரமான மதுரை, தகவல் தொழில்நுட்ப நகராமான பெங்களூருவுடன் இணைக்கப்பட்டதற்கு மகிழ்ச்சி தெரிவித்தார். நாட்டில் தற்போது வந்தே பாரத் ரயில்களின் எண்ணிக்கை 102ஆக அதிகரித்துள்ளதாக கூறிய பிரதமர், உலக தரத்திலான பாதுகாப்புடன் கூடிய அதிவிரைவு ரயில் பயணத்தை வந்தேபாரத் ரயில்கள் உறுதி செய்வதாக கூறினார்.

நிகழ்ச்சியில் மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் பேசுகையில், கடந்த 10 ஆண்டுகளில் 31 ஆயிரத்து 180 கிலோ மீட்டர் புதிய தண்டவாளங்கள் ரயில்வே நெட்வொர்க்கில் சேர்க்கப்பட்டு தினமும் 14 கிலோ மீட்டர் புதிய பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன என்றும்

வந்தே பாரத் -3 (18)

தெரிவித்தார். கடந்த 10 ஆண்டுகளில் 40 ஆயிரம் கிலோ மீட்டர் ரயில் பாதைகள் மின்சார பாதைகளாக மாற்றப்பட்டுள்ளதாகவும், மேலும் ஆயிரத்து 326 ரயில் நிலையங்கள் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

சென்னையில் நடைபெற்ற வந்தே பாரத் ரயில் தொடக்க நிகழ்ச்சியில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கலந்துகொண்டு பேசுகையில், மதுரை-பெங்களூர், சென்னை- நாகர்கோவில் இடையிலான வந்தே பாரத் ரயில்களின் இயக்கம் மிகப்பெரிய வெற்றியடையும் என்று கூறினார். அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 78 ரயில் நிலையங்கள் நவீனப் படுத்தப்படும் என்று கூறிய அவர், சென்னை எழும்பூர் ரயில் நிலையம் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

மதுரையில் நடைபெற்ற, மதுரை-பெங்களூர் வந்தே பாரத் ரயில் தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய மத்திய இணையமைச்சர் திரு. சோமண்ணா, தமிழ்நாட்டில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டங்களை செயல்படுத்துவதிலும், ரயில்வே துறையில் அதிக வேலைவாய்ப்புகளை

வந்தே பாரத் -4 (17)

உருவாக்குவதிலும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு முக்கிய பங்கு வகிக்கிறது என்று கூறினார். மாற்றியமைக்கப்பட்ட பாம்பன் ரயில் பாலம் வரும் டிசம்பர் மாதத்திற்குள் தயாராகி விடும் என்றும் அவர் தெரிவித்தார்.

உத்தரபிரதேசத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வந்தே பாரத் எக்ஸ்பிரஸ், மீரட்டை, மாநில தலைநகர் லக்னோவுடன் இணைக்கும். இதன் சேவை, மீரட்டிலுள்ள திகம்பர் ஜெயின் கோவில், மான்சா தேவி மந்திர் மற்றும் லக்னோவிலுள்ள சந்திரிகாதேவி கோவில், பூத்நாத் மந்திர் மற்றும் புத்தேஷ்வர் மகாதேவ் கோவில் போன்ற புனித யாத்திரை தலங்களுக்கு விரைவான பயணத்தை வழங்குவதன் மூலம் ஆன்மிக சுற்றுலாவையும், தொழில் வளர்ச்சியையும் மேம்படுத்தும். இந்த ரயில் செவ்வாய்க்கிழமை தவிர வாரத்தில் ஆறு நாட்களும் இயக்கப்படும். இதன் வழக்கமான சேவைகள் நாளை முதல் தொடங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை-நாகர் கோவில் மற்றும் மதுரை-பெங்களூர் இடையிலான வந்தே பாரத் ரயில் சேவைகள் செப்டம்பர் 2ஆம் தேதி முதல் தொடங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மோடி புருனை (9)

பிரதமர் திரு நரேந்திர மோடி 3 நாள் அரசுமுறை பயணமாக வரும் செவ்வாய்க்கிழமை புருனை மற்றும் சிங்கப்பூருக்குச் செல்கிறார். இந்திய பிரதமர் ஒருவர் இருதரப்பு ரீதியில் புருனை நாட்டிற்கு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும். சிங்கப்பூர் பிரதமர் திரு.லாரன்ஸ் வாங்-கின் அழைப்பை ஏற்று தமது பயணத்தின் 2ஆம் கட்டமாக வரும் புதன்கிழமையன்று பிரதமர் சிங்கப்பூர் செல்கிறார்.

## உச்ச நீதிமன்றம் -1 (14 )

புதுடெல்லியிலுள்ள பாரத் மண்டபத்தில் மாவட்ட நீதித்துறையின் தேசிய மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடக்கி வைத்தார். அப்போது பேசிய அவர், ஜனநாயகத்தின் அன்னையாக, இந்தியா திகழ்வதற்கு உச்ச நீதிமன்றமும் முக்கியப் பங்களித்து வருவதாக கூறினார். மேலும், உச்ச நீதிமன்றத்தின் 75ஆவது ஆண்டு கொண்டாட்ட நினைவு அஞ்சல் தலை மற்றும் நாணயத்தையும் இந்த நிகழ்ச்சியில் தாம் வெளியிட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார். நீதித்துறையின் மேல் மக்கள் முழு நம்பிக்கை வைத்துள்ளனர் என்றும், இதற்கு அத்துறையின் சேவைகளே காரணம் என்றும் தெரிவித்தார். மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே புதிய குற்றவியல் சட்டங்கள் கொண்டுவரப் பட்டுள்ளதாகவும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் கவலை

அளிப்பதாக உள்ளது என்றும் பிரதமர் கூறினார். இவற்றைத் தடுப்பதற்கான கடுமையான சட்டங்கள் உள்ள போதிலும் இதுபோன்ற குற்ற வழக்குகளில் தண்டனை விரைந்து வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

உச்ச நீதிமன்றம் -2 (7 )

இந்நிகழ்ச்சியில் பேசிய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதித்துறையின் சேவைகளை வழங்குவதிலும், வழக்கறிஞர்களுடன் இணக்கத்தைப் பேணுவதிலும் மாவட்ட நீதிமன்றங்கள் முக்கியப் பங்களிப்பதாக தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால், 3ஆம் கட்ட மின்னணு நீதிமன்றத் திட்டத்திற்காக 7 ஆயிரத்து 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார். நீதித்துறை சேவைகளில் தொழில்நுட்பத்தை கூடுதலாக பயன்படுத்த இது உதவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

**ஜித்தின் ராம் (10)**

நாட்டின் கதர் கிராம கைவினைப் பொருட்களின் பயன்பாட்டை அதிகரிப்பதன் அவசியத்தை மத்திய சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு. ஜித்தின் ராம் வலியுறுத்தியுள்ளார். நாடு முழுவதும் அக்டோபர் 2ஆம் தேதி முதல் 31ஆம் தேதி வரை காதி திருவிழா நடைபெறுவதையொட்டி புதுடெல்லியில் இன்று ஆலோசனை மேற்கொண்ட அவர், ஊரகப்பகுதி மக்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில் கதர் ஆடைகளை மக்கள் அதிக அளவில் பயன்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார். காதி மேம்பாட்டிற்கான மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து அறியும் வகையில் விரிவான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார். நிகழ்ச்சியில் இத்துறைக்கான இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்த் லஜே காதி மற்றும் கிராம தொழில்கள் ஆணையத்தின் தலைவர் திரு. மனோஜ் குமார் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**சட்டமன்ற வளாகம் (11)**

புதுச்சேரி, தட்டாஞ்சாவடி ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் 576 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

செயலகத்துடன் கூடிய ஒருங்கிணைந்த சட்டப்பேரவை கட்டடம் கட்ட, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் ஒப்புதல் அளித்துள்ளதாக, சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம் செய்தியாளர்களிடம் தெரிவித்தா◌ா◌். இது தொடர்பான கோப்பு மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப் பட்டுள்ளதாகவும், அனுமதி கிடைத்தவுடன் புதிய சட்டப் பேரவைக் கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். புதுச்சேரி அரசின் முயற்சிக்கு ஒப்புதல் அளித்துள்ள துணைநிலை ஆளுநருக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும், திரு.செல்வம் கூறினார்.

புதுச்சேரி பணியாளர் தேர்வு (6)

புதுச்சேரி பாரதிதாசன் மகளிர் கல்லூரித் தேர்வு மையத்தில் நாளை நடைபெற உள்ள, மத்திய பணியாளர் தேர்வாணையத்தின், Combined Defence Services தேர்வு மற்றும், National Defence Academy - Naval Academy தேர்வுகளில் கலந்து கொள்ளும் தேர்வர்களின் வசதிக்காக புதுச்சேரி அரசு, புதிய பேருந்து நிலையத்திற்கும், தேர்வு மையத்திற்கும் இடையே சிறப்பு பேருந்துகளை இயக்க உள்ளது.

**பாராலிம்பிக்ஸ் (10 )**

பாரீசில் பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் இந்திய துப்பாக்கி சுடும் வீராங்கனை **அவனி லேக்கரா** தங்கப் பதக்கமும், சக வீராங்கனை **மோனா அகர்வால்** வெண்கலப் பதக்கமும் வென்றுள்ளனர். துப்பாக்கி சுடும் வீரர் **மணீஷ் நர்வால்**, வெள்ளிப் பதக்கமும், ஓட்டப் பந்தய வீராங்கனை **பிரித்தி பால்**, வெண்கலப் பதக்கமும் வென்றனர். பிரதமர் திரு நரேந்திர மோடி இவர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பதக்கப்பட்டியிலில் சீனா 12 தங்கம், 9 வெள்ளி, 4 வெண்கலம் என 25 பதக்கங்களுடன் முதலிலிடத்திலும், இந்தியா 1 தங்கம், 1 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 18ஆவது இடத்திலுள்ளன.

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**டென்னிஸ் (4 )**

நியூயார்க்கில் நடைபெற்று வரும் அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியின் 3ஆவது சுற்று ஆட்டத்தில் செர்பிய வீரர் லோவோக் ஜோகோவிச் ஆஸ்திரேலிய வீரர் அலெக்சி பாப்பிரினிடம் தோல்வியடைந்து வெளியேறினார்.

## வானிலை (10 )

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்துள்ளது. இது விசாகப்பட்டினம்-கோபால்பூர் இடையே கலிங்கப்பட்டினம் அருகே இன்று நள்ளிரவு கரையைக் கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக ஒடிசா மற்றும் சத்தீஷ்கரில் இன்றும் நாளையும் அதி கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும், ஆந்திராவில் கடலோரப் பகுதிகளிலும் கனமழைப் பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல் தெலங்கானாவின் பெரும்பாலான பகுதிகளில் இன்றும் நாளையும் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் துறைமுகத்தில் 1ஆம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. மேலும் மீனவர்கள் யாரும் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## கொல்கத்தா (9)

கொல்கத்தாவிலுள்ள ஆர்.ஜி.கர் மருத்துவமனை மற்றும் கல்லூரியில் கடந்த 9ஆம் தேதி, முதுகலை பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தை

தொடர்ந்து, அக்கல்லூரி இளங்கலை மருத்துவர்கள், கொலையாளிகளை கைது செய்யக் கோரி, தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், தற்போது பொதுமக்களின் நலன் கருதி தொலைபேசி மருத்துவ ஆலோசனை வழங்கும் சேவையை தொடங்கியுள்ளனர். இதன்படி தினமும் காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை இந்த சேவையைப் பயன்படுத்தி, மக்கள் மருத்துவ ஆலோசனை பெறலாம்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியிலிருந்து காணொளி காட்சி மூலம், 3 வந்தே பாரத் ரயில்களை, கொடி அசைத்து தொடக்கி வைத்தார்.

புதுடெல்லியிலுள்ள பாரத் மண்டபத்தில் மாவட்ட நீதித்துறையின் தேசிய மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடக்கி வைத்து உரையாற்றினார்.

புதுச்சேரியில் புதிய சட்டப்பேரவை கட்டடம் கட்ட, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் ஒப்புதல் அளித்துள்ளதாக, சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம் தெரிவித்தார்.

பாரீஸ், பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் இந்தியா இதுவரை 1 தங்கம், 1 வெள்ளி மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 18ஆவது இடத்திலுள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. SS/MS/VM**